# இரட்சிப்பு
RATCHIPPU

RATCHIPPU = SALVATION

Volume-14 | July - 2024 | Issue-02

Price Rs.5-00 | Annual Subscription Rs.60/-




முன்னோர்களின்
பாரம்பரியமாய்
நீங்கள் அநுசரித்துவந்த
வீணான நடத்தையினின்று
அழிவுள்ள வஸ்துக்களாகிய
வெள்ளியினாலும் பொன்னினாலும்
மீட்கப்படாமல்,

குற்றமில்லாத
மாசற்ற
ஆட்டுக்குட்டியாகிய
கிறிஸ்துவின்
விலையேறப்பெற்ற
இரத்தத்தினாலே
மீட்கப்பட்டீர்கள்

1பேதுரு-1:19



## இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தம்

The Precious Blood of Jesus Christ

# இயக்குநர் கடிதம்... From Mission Director's Desk




கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! இயேசு கிறிஸ்துவின் இனிய திருப்பெயரில் உங்களை அன்புடன் வாழ்த்துகிறேன். இந்த ஆண்டின் ஏழாவது மாதத்தைக் காண கிருபை பாராட்டின நம் கர்த்தாதி கர்த்தருக்குத் துதி தோத்திர பலிகளை ஏறெடுப்போம். இந்த கல்வியாண்டில் புதிய உயர் படிப்புகளில் சேர பிரயாசப்படுகிற நம் பிள்ளைகளின் நுழைவுத்தேர்வுகள், கலந்தாய்வு மற்றும் நேர்காணல்களில் அவர்களுக்கு மனிதர் தயவும் தேவ ஒத்தாசையும் கிடைக்கவும், அவர்கள் விரும்புகிற கோர்ஸ்-களில் அட்மிஷன் கிடைக்கவும் அவர்களுடைய பண-தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபித்துக்கொள்வோம்.

நம் நாட்டில் பதவியேற்றிருக்கும் புதிய அரசு, ஜனநாயக நெறிமுறைகளைப் பின்பற்றவும் அனைத்து மக்களின் நலனுக்காக செயல்படவும் ஜெபித்துக்கொள்வோம்.

நமது ஊழிய திட்டங்களான 'ஜெப-ஜன்னல்' - ஜெப நேரங்கள் (ஜூலை 12, 19, 26), 'அனைவரும்-ஊழியத்தில்' - கைபிரதி ஊழிய திட்டம், 'வேதாகம போட்டிகள்' ஆகிய வற்றில் பங்குபெற உங்களை அன்புடன் அழைக்கிறோம். நமது பத்திரிக்கை ஊழியங்கள், காணொலி-செய்தி ஊழியங்கள், வலைதள ஊழியங்கள் (www.ratchippu.com), புத்தக-வெளியீட்டு ஊழியங்கள், கைப்பிரதி ஊழியங்கள், மிஷனரி ஊழியங்கள், திருச்சபை ஊழியங்கள் உள்ளிட்ட நம் இயக்குநரின் அனைத்து ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக்கொள்ளுங்கள்.

வேதாகமப் போட்டிக்கான பதில்கள், ஜெப-விண்ணப்பங்கள், அனுபவ சாட்சிகள் மற்றும் காணிக்கைகள் அனுப்புவோர் நமது ஊழிய இயக்குநரின் பெயருக்கு அனுப்பிவையுங்கள் (CONTACT-DETAILS, ONLINE வங்கி விபரம், UPI விபரம், QR CODE ஆகியவை பக்கம் 18-ல் தரப்பட்டுள்ளன).

தேவகிருபை உங்களோடு இருப்பதாக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்
அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா

---

**வேத-வரிகள்-163** **1பேதுரு - 1:19**

## தமிழ் வேதாகமங்களின் ஒற்றுமைத் திரட்டு


| சத்திய வேதம் (ரேனியஸ்-1840) | பரிசுத்த வேதாகமம் (பவர்-1867) |
|---|---|
| குற்றமும் மாசுமில்லாத ஆட்டுக்குட்டியைப் போன்ற கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப் பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே. | குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப் பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே. |
| **திருவிவிலியம் (பொது-1995)** | **பரிசுத்த பைபிள் (இ.ஆர்.வி-1998)** |
| உங்களை விடுவிக்கக் கொடுக்கப்பட்ட விலை என்னவென்று உங்களுக்குத் தெரியும். அது மாசு மறுவற்ற ஆட்டுக் குட்டியைப் போன்ற கிறிஸ்துவின் உயர்மதிப்புள்ள இரத்தமாகும். | குற்றம் குறையில்லாத ஆட்டுக்குட்டியான இயேசு கிறிஸ்துவின் விலைமதிப்பற்ற இரத்தத்தினாலே இரட்சிக்கப்பட்டீர்களென்று நீங்கள் அறிவீர்கள். |

வசன தியானம்-153

# இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தம்



## வேத–புத்தகத்தில் எவ்வாறு அழைக்கப்படுகிறது



1Peter-1:19 1பேதுரு-1:19

**குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தாலே மீட்கப்பட்டீர்கள். 1பேது-1:19**

சிலுவையில் சிந்தப்பட்ட இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தத்தைக் குறிப்பிட்டு வேதாகமம் அளிக்கும் வெவ்வேறு விளக்கங்களை ஜெபத்துடன் தியானிப்போம்.

**நியாயப்படுத்தும் இயேசுவின் இரத்தம்:** நாம் பாவம் செய்தபோதும், ஒரு போதும் பாவம் செய்யாதவர்கள்போல் கடவுள்முன் நம்மை நிற்கவைப்பது இயேசுவின் இரத்தமே. இது, கடவுளின் நீதிமன்றத்தின் முன் நாம் நிரபராதியாக நிற்பதைக் காட்டுவதாகும். இயேசுவின் இரத்தம் மூலம் நாம் பெறும் மன்னிப்பு மிக உண்மையானது. வேதம், இதை '**நியாயப்படுத்துதல்**' என்று அழைக்கிறது.

**ஒப்புரவாக்கும் இயேசுவின் இரத்தம்:** நாம் செய்த பாவங்கள் கடவுளுக்கும் நமக்கும் இடையே பகை மற்றும் பிரிவினையை ஏற்படுத்திய நிலையில். இயேசு, தம் இரத்தத்தின் மூலம் நம்முடன் நட்பு கொள்கிறார்; நம்மை தமது சிநேகிதர் என்கிறார். நமது இரட்சிப்புக்காக நண்பர் இயேசுவின் இரத்தத்தை நாம் நம்பும் போது, அது பகையையும் பிரிவினையையும் நீக்கி, சமாதானத்தை எற்படுத்துகிறது. வேதம் இதை சமரசம் அல்லது '**ஒப்புரவு**' என்று அழைக்கிறது.

**மீட்டெடுக்கும் இயேசுவின் இரத்தம்:** கடவுள் நம்மை சாத்தானின் ஆதிக்கம் மற்றும் இருளின் ஆதிக்கத்திலிருந்து மீட்டெடுத்து, பரிசுத்தமான ஒரு வாழ்வை நமக்கு அளித்துள்ளார். இயேசு சிலுவையில் சிந்திய இரத்தத்தின் வாயிலாக நமக்கு விடுதலையை அளித்து, நம் பாவங்களினிமித்தம் நமக்கு வரவேண்டிய தண்டனையை எடுத்துப்போட்ட இச்செயலை, வேதம் '**மீட்பு**' என அழைக்கிறது.

**பரிசுத்தமாக்கும் இயேசுவின் இரத்தம்:** நாம் அனைவரும் கடவுளுக்கு எதிராக பாவம் செய்கிறோம். அந்த பாவங்களின் விளைவாக நாம் அசுத்தம் ஆகிறோம். எனவே, இயேசுவின் இரத்தத்தால் நாம் சுத்திகரிக்கப்பட வேண்டியது அவசியம். இயேசுவின் இரத்தம் சுத்திகரிக்கும் சக்தியாய் செயல்படுவதால் நமது பாவக்கறை கள் படிப்படியாக மறைந்து விடும். வேதம் இதை '**பரிசுத்தம்**' என்று அழைக்கிறது.

இயேசுவின் இரத்தம் இத்தனை நற்பண்புகளைக் கொண்டுள்ளது. எனவே, நாம் வேலை செய்யும்போதோ, படிக்கும்போதோ, சமையல் செய்யும்போதோ அல்லது வாகனம் ஓட்டும்போதோ இயேசுவின் இரத்தம் குறித்து தியானிக்க சில நிமிடங்களை ஒதுக்குவோம். இந்த தியானம் நம்மீதுள்ள கடவுளின் அன்பையும் மகிழ்ச்சியையும் முழுமையாக்க உதவும். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.



REV. DHARMARAJA

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஊழியவு இயக்குநர்
நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள், சென்னை–93. தென்னிந்தியா.

தேவசெய்தி...



அருட்திரு. தர்மராஜா

# இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தம்

1 பேதுரு 1:19

## THE PRECIOUS BLOOD OF JESUS CHRIST

**Rev. S.J.D. Dharmaraja**
PRESBYTER AND MISSION DIRECTOR
GOOD TIDINGS BIBLE PRINTS MINISTRIES, SALIGRAMAM, CHENNAI-93, SOUTH INDIA

ஜுலை மாதத்தில் நம் கவனத்தை ஈர்க்கக்கூடிய விஷயங்களில் ஒன்று '**இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தம்**' என்னும் செம்பொருள். உலக திருச்சபை இந்நாட்களில் ''குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தாலே மீட்கப்பட்டீர்கள்.'' (1பேது-1:19) என்ற தூய. பேதுருவின் வார்த்தைகளை தியானித்து வருகிறது. 'விலையேறப்பெற்ற' என்ற வார்த்தை, 'விலைமதிப்பற்ற' அல்லது 'அருமைமிக்க' என பொருள்படுகிறது. இது குறித்து, ''பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்துவந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல்,'' (வச-18) அவற்றைவிட விலையேறப்பெற்ற கிறிஸ்துவின் இரத்தத்தால் மீட்கப்பட்டீர்கள் என்று பேதுரு குறிப்பிடுகிறார். இதையே பவுல், 'இரத்தின கற்களை விட விலையேறப்பெற்றவர் இயேசுவாகிய மூலைக்கல்' என 1கொரி-3:12ல் குறிப்பிடுகிறார். எனவே, கிறிஸ்துவின் இரத்தம் விலையேறப்பெற்றது, மதிப்புமிக்கது மற்றும் தனித்துவமானது என்பதை நினைவில் கொள்வோம்.

**ஆனால், கிறிஸ்துவின் இரத்தம் யாருக்கு விலையேறப்பெற்றது? அது எவ்வாறு மதிப்புமிக்கது, விலையுயர்ந்தது மற்றும் தனித்துவமானது?** நமது இரட்சகராகிய கிறிஸ்துவின் இரத்தம், கடவுளுடைய பார்வையில் மாத்திரமல்ல விசுவாசிகளான நமது பார்வையிலும் விலையேறப்பெற்றதுதான். *கிறிஸ்துவின் இரத்தம் கடவுளுக்கு விலைமதிப்பற்றது, ஏனெனில் அது அவரது சொந்த மகனின் இரத்தம்:* பிதாவுக்கு, தமது மகனான இயேசுவைவிட விலையேறப்பெற்றவர் வேறொருவரும் இல்லை. ''இவர் என்னுடைய நேசகுமாரன்; இவரில் பிரியமாயிருக்கிறேன்.'' என மத்-3:17ல் என இதை நாம் வாசிக்கிறோம். *கிறிஸ்துவின் இரத்தம் கடவுளுக்கு விலையேறப்பெற்றது, ஏனெனில் அது தேவநீதியின் கனத்தை நிரூபிக்கிறது:* தூய. பவுல் கூறுகிறார்: ''தேவன், இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருப்போரை நீதிமான்களாக்கி, தமது நீதியை காண்

பிக்கும் பொருட்டாக, கிறிஸ்து இயேசுவின் இரத்தத்தைப்பற்றும் விசுவாசத்தாலே பலிக்கும் கிருபாதார பலியாக அவரையே ஏற்படுத்தினார்.'' (ரோம-3:21-26) *கிறிஸ்துவின் இரத்தம் கடவுளுக்கு விலைமதிப்பற்றது, ஏனெனில் அது அவரது அன்பின் அழகை வெளிப்படுத்துகிறது:* கிறிஸ்து, கீழ்ப்படிதலுடனும் மகிழ்ச்சியுடனும் தம் தந்தையை மட்டுமல்ல, தனது ஆடுகளையும் நேசிக்கிறார். இது புரிந்துகொள்வதற்கு அப்பாற்பட்ட ஒரு காதல்!

கிறிஸ்துவின் இரத்தம் விசுவாசிகளாகிய நமக்கும் விலையேறப்பெற்றதாகும். அது சக்திவாய்ந்த அரணாகவும், விடுவிக்கும் குறிக்கோளுடைய ஆயுதமாகவும் இருகிறது. கிறிஸ்துவின் இரத்தம் நமக்கு விலையேறப்பெற்றது என்பதை ரூபிப்தற்கான வேதவசன ஆதாரங்களை சற்றே நாம் தியானிப்போம்.

**1. கிறிஸ்துவின் இரத்தம் நமக்கு விலைமதிப்பற்றது, ஏனென்றால் அது சம்பாதிக்கிறது:** எதைச் சம்பாதிக்கிறது? அது, மீட்பை சம்பாதிக்கிறது; ஆத்துமாக்களை, விசுவாசக்கூட்டத்தை, திருச்சபையை சம்பாதிக்கிறது. தூய. பவுல் மிலேத்து பட்டணத்தில், எபேசு சபையாருடன் பேசும்போது, ''தேவன் தமது சுயரத்தத்தினால் சம்பாதித்துக்கொண்ட தம் சபையை மேய்ப்பதற்கு பரிசுத்த ஆவியானவர் உங்களை கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையும் குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்'' (அப்-20:28) என்று சொல்லுகிறார். பாவம் நம்மை அநியாயமாக்குகிறது; ஆனால், கிறிஸ்துவின் இரத்தம் நம்மை நியாயப்படுத்துவதற்கு தேவையான அடிப்படை விலையைக் கொடுத்து, நமக்கு விடுதலையை சம்மாதித்துத் தருகிறதாக இருக்கிறது. இயேசுவின் இரத்தத்தைக் கிரயமாகக் கொடுத்து, கடவுள் நமக்கு மீட்பைச் சம்பாதித்தார். ஆகவே, இயேசுவின் இரத்தம் விசுவாசிகளையும், விசுவாசக் குடும்பங்களையும் மட்டுமல்ல திருச்சபைகளையும் சம்பாதிக்கிறது. இது குறித்து 1கொரி-7:23ல், தூய. பவுல், ''நீங்கள் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள்'' என்றும்; 2பேது-2:1ல் தூய. பேதுரு, 'உங்களை தமது இரத்த-கிரயத்துக்குக் கொண்ட ஆண்டவரை மறுதலிக்கும்வகையில் கள்ளத் தீர்கதரிசிகளுக்கும் கள்ளப் போதகர்களுக்கும் இடங்கொடுக்க வேண்டாம்' என்றும் கூறுகின்றனர். கிறிஸ்துவின் இரத்தம் இவ்விதமாக நம்முடைய மீட்புக்கான விலையை-கிரயத்தை செலுத்தி நம்மை கடவுளின் பிள்ளைகளாக சம்பாதித்திருக்கிறபடியால் அது நமக்கு மிகவும் விலையேறப்பெற்றது ஆகும்.

**2. கிறிஸ்துவின் இரத்தம் நமக்கு விலைமதிப்பற்றது, ஏனென்றால் அது செலுத்துகிறது:** அது எதைச் செலுத்துகிறது? நமது அநீதியின் கடனைச் செலுத்துகிறது. 'பாவத்தின் சம்பளம் மரணம்' (ரோம-6:23); 'எல்லா மனிதரும் பாவம் செய்தவர்கள்' (ரோம-3:23), மேலும் 'பாவ விமோசனத்திற்கான பணம் (கிரயம்) குற்றமற்ற கிறிஸ்துவின் இரத்தமே' (1பேது-1:18,19) என வேதம் சொல்லுகிறது. உண்மையில், கிறிஸ்துவின் இரத்தம் என்ற பணம் செலுத்தப் பட்டதாலேயே நாம் மீட்கப்பட்டோம். எகிப்தில் இஸ்ரவேலர்கள் மரணத்தில்

இருந்தும் அடிமைத்தனத்திலிருந்தும் மீட்கப்படும்பொருட்டு ஆட்டுக்குட்டியின் இரத்தம் வீடுகளின் வாசல்களில் பூசப்பட்டதை இது நினைவுபடுத்துகிறது. எனினும், கிறிஸ்துவின் இந்த செலுத்துதல் முற்றிலும் வேறுபட்டதாகும். இது, நம்மைப் போன்ற பாவிகளை சிறையிருப்பிலிருந்து மட்டுமல்ல, பாவப் -பிசாசின் பிடியிலிருந்தும் மீடடெடுக்கும் மாசற்ற இரத்தம். இந்த இரத்தம் உங்களுக்கு எவ்வளவு விலைமதிப்பை செலுத்தியிருக்கிறது? யோசித்துப் பாருங்கள்.

**3. கிறிஸ்துவின் இரத்தம் நமக்கு விலைமதிப்பற்றது, ஏனெனில் அது சுத்தப்படுத்துகிறது:** எதை சுத்தப்படுத்தகிறது? நம் உட்புறத்தை, மனசாட்சியை சுத்தப்படுத்துகிறது! எபிரேயர் நிருபத்தின் ஆசிரியர், பழைய - புதிய உடன்படிக் கையின் கீழ் சிந்தப்படுகிற விலங்குகள் மற்றும் கிறிஸ்துவின் இரத்தங்களுக்கு இடையிலான கூர்மையான வேறுபாட்டை வரைகிறார். அதாவது, இயேசுவின் இரத்தம் நம் உள்ளத்தை சுத்திகரித்தி, நம் மனசாட்சியை தூய்மையாக்குகிறது.

ஆக்டேவியஸ் வின்ஸ்லோ என்பார், ‘கிறிஸ்துவின் இரத்தம் - ஆன்மாவிற்கு ஒரு தெய்வீக குளியல்’ என்று எழுதுகிறார். இவ்வாறாக, நியாயப்படுத்தி - - பாவநிவர்த்தி செய்து - தேவகோபத்தை தீர்த்து - ஆன்மாவை தூய்மைப்படுத்தும் கிறிஸ்துவின் இரத்தம் மிகவும் விலையேறப்பெற்றது அல்லவா?

**4. கிறிஸ்துவின் இரத்தம் நமக்கு விலைமதிப்பற்றது, ஏனெனில் அது பேசுகிறது:** என்ன பேசுகிறது? யாரிடம் பேசுகிறது? ஆபேலின் இரத்தம் பேசியதை விட இயேசுவின் இரத்தம் சிறந்த வார்த்தையைப் பேசுகிறது என்று எபி-12:24ல் வாசிக்கிறோம். இது தரையில் இருந்து பழிவாங்கும் விதமாய் பேசவில்லை, மாறாக இது, கடவுளின் ராஜ்யம் மற்றும் மங்காத ஆசீர்வாதங்களைப் பற்றி பேசுகிறது. இயேசுவானவர், தேவனுடைய சந்நிதானத்தில் தமது இரத்தத்தின் எல்லையற்ற தகுதியை எடுத்துரைக்கிறார். அவ்வாறு, இயேசு நமக்காக பரிந்து பேசும் மன்றாட்டின் வழியாக இந்த இரத்தம் கடவுளிடம் பேசுகிறது. கிறிஸ்து வானவர், சிலுவையில், குற்றமற்ற தனது இரத்தத்தை ஊற்றியதின் வழியாய் அவரது இரத்தமானது பரலோகத்தில் நமக்காகப் பரிந்து பேசுகிறது.


பிரியமானவர்களே! நம் பாவங்களை பரிகரித்து, நம்மை மீட்டெடுக்கும் விலை யாக பரலோக ராஜா கொடுக்கும் கருஞ்சிவப்பு நிறமான பணமே இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தம். தேவமனிதராகிய சார்ல்ஸ் வெஸ்லி எழுதிய ‘எழுக! என் ஆன்மா எழுகிறது’ என்ற பாடலும் இக்கருத்தையே வலியுறுத்துகிறது.

கிறிஸ்துவின் விலைமதிப்பற்ற இரத்தம்! நமக்காய் பரிந்து பேச,
அவரது மீட்கும் அன்பு! நம்மை நேசிக்க,
அவரது இரத்தம்! நம் பாவங்களுக்காய் பரிகாரம் செய்ய,
அவரது இரத்தத்தில் இப்போது கிருபாசனம் ஒளிர்கிறது.

கிறிஸ்துவின் பணியில் உங்களுடன்
**அருட்திரு.எஸ்.ஜே.டி. தர்மராஜா**

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஆயர் மற்றும் ஊழிய இயக்குநர், நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள், சாலிகிராமம், சென்னை-93, தென்னிந்தியா.

வேத ஆராய்ச்சி - 86



Rev. Dr. சுரேஷ் ராஜன்

# சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள்

THE PLACE FOR REAL BIBLE Study

Author: Rev.Dr. D. Suresh Rajan

## சங்கீதம் – 86

**EPISODE-86**

**முகவுரை:** இச்சங்கீதத்திற்கு 'தாவீதின் விண்ணப்பங்கள்' என தலைப்பு கொடுக்கப் பட்டுள்ளது. தாவீது அரசர் தனது மகன் சாலமோன் அரியணையேறிய பின்னர், தனது வயோதிப நாட்களில் பாடின ஒரு பாடல் இது என சில இறையியல் அறிஞர்களும், இது தாவீது அரசன் அல்லாத வேறோருவரால் தாவீதின் பிற சங்கீதங்களிலுள்ள குறிப்புகளின் துணையுடன் எழுதப்பட்டது என வேறு சிலரும் கருதுகின்றனர். எவ்வாறாயினும், இச்சங்கீதத்தின் வாயிலாக தாவீது அரசர் இறைவன் மீது கொண்டிருந்த அன்பையும், பக்தி வைராக்கியத்தையும், இறைவனைக் குறித்த அவரது புரிதலையும் அறிந்துகொள்ள முடிகிறது.

யெகோவா கடவுள் நல்லவர், மன்னிக்கிறவர், கிருபை மிந்தவர், மகத்துவம் உள்ளவர், அதிசயங்களை செய்கிறவர், வல்லமை அருளுகிறவர், ஜெபத்துக்கு செவிகொடுக்கிறவர், அவரைத்தவிர வேறு தெய்வம் இல்லை என்றெல்லாம் ஆண்டவரின் குணாதிசயங்களை தாவீது பட்டியலிடுகிறார். தனது ஜெபநேரத்தில் அவர் எப்படிப்பட்ட வேண்டுதல்களை செய்கிறார் என்ற கருத்தாக்கம், குறிப்பாக பின்வரும் மூன்று குறிப்புகள் நமக்கு மிகுந்த பிரயோஜனமாக இருக்கும்.

**1. ஆத்துமாவை குறித்த விண்ணப்பம்: (வச-2,4)** ஆத்துமா என்னும் சொல்லுக்கு 'நெ.:.பெஷ்' என்ற எபிரெயச் சொல் பழைய ஏற்பாட்டிலும், 'சைக்கீ' என்ற கிரேக்கச் சொல் புதிய ஏற்பாட்டிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்த சொற்களின் பொருள், 'உள்ளான மனிதன்' அல்லது 'உண்மையான மனிதன்' என்பதாகும். உளவியலாளர்கள் இதை ஆளத்துவம் (personality) என்று கூறு கின்றனர். தேவன், மனிதனை படைத்தபொழுது அவன் ஜீவாத்மாவானான் (ஆதி-2:7) என்று நாம் காண்கிறோம். ஆனால், 'பாவம் செய்கிற ஆத்மா சாகும்' (எசே-18:20) என்பது திருமறை நமக்குச் சொல்லும் செய்தியாகும். ஆகவே, நாம் நமது ஆத்மாவை குறித்து மிகுந்த அக்கறை உள்ளவர்களாக இருக்கவேண்டும். இதை நன்கு அறிந்திருந்த தாவீது, ஆண்டவர் தனக்கு எல்லா விதமான உலக சம்பத்துக்களையும், மேன்மையையும், மகிமையையும் கொடுத்திருந்தாலும், அவரோடு நீடித்த நாட்களாய் வாழ்வதற்கு தனது ஆத்துமம் செழித்திருக்கவேண்டும் என்பதிலே மிகுந்த கருத்துள்ளவராய் இருந்தார்.

அன்பான தேவ பிள்ளைகளே! உங்கள் ஆத்மாவை குறித்து நீங்கள் அக்கறை உள்ளவர்களாக இருக்கிறீர்களா? உலகில் வளமான வாழ்வு வாழ்வதற்காக நன்றாக படிக்கிறோம், நல்ல தொழிலை தேர்ந்தெடுக்கிறோம், சிறந்த வாழ்க்கைத்

துணையைத் தேர்ந்தெடுக்கிறோம், பணம்-ஆஸ்தி-அந்தஸ்தை சேர்க்கிறோம் ஆனால் இவைகள் எல்லாம் சொற்ப காலம் மாத்திரமே நிலைத்திருக்கும். நம் அனைவரின் சரீரமும் ஓர் நாள் மரித்து அடக்கம் பண்ணப்படும். ஆனால், இவ்வுலகின் ஆசாபாசங்களில் இருந்து நமது ஆத்துமாவை காத்துக் கொள்வ தினால் மாத்திரமே, இறைவன் தரும் விடுதலை வாழ்வை - நித்திய ஜீவனை பெற்று இறைவனோடு என்றும் நாம் வாழ முடியும். எனவே, நமது ஆத்துமாவை குறித்து அக்கறை உள்ளவர்களாக, ஆத்துமா கறைப்பட்டு போகாமல் பரிசுத்தமாய் காணப்பட பிரயாசம் எடுப்போம்.

**2. இறைவனின் வழியை அறிந்துகொள்ள விண்ணப்பம்: (வச.11மு)** தாவீது, ஒரு ராஜாவாக இருந்தாலும், பக்தி மார்க்கத்திலும், கடவுளின் சத்தியத்திலும் நடப்பதற்கு தனக்கு கடவுள்தாமே போதிக்கவேண்டும் என்று மன்றாடுவதை இங்கு காண்கிறோம். ‘‘கர்த்தாவே, உமது வழியை எனக்குப் போதியும், நான் உமது சத்தியத்திலே நடப்பேன்.’’ (வச-11).

அருமையான இறைமக்களே! ஆண்டவரின் வழியில் நாம் நடப்பது மிகவும் அவசியமானது. யார் நமக்கு கடவுளின் வழியை சரியாகக் காட்ட முடியும்? பழைய ஏற்பாட்டின் நாட்களில் தீர்க்கதரிசிகள், ஆசாரியர்கள் மூலமாக இறைவன் தமது அடியார்களோடு பேசினார். கொள்ளை நோய், எதிரிகளின் படையெடுப்பு போன்ற வேதனையான சூழ்நிலைகளில் இறைமக்கள் செய்யவேண்டிய காரியங் கள் குறித்து தேவமனிதர்கள் அவர்களுக்கு ஆலோசனைகளைத் தந்தனர். நம் நாட்களில் இறைவனின் முழு திருவுளச்சித்தமும் அடங்கிய வேதத்தை வாசிப்பதன் மூலமாக அந்த சிலாக்கியம் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இதையும் தாண்டி நமது வாழ்வில் கடினமான தீர்மானங்கள் எடுக்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலைகளில் இறைவன் நமக்கு ஆலோசனை கொடுப்பதற்கு ஆயத்தமாய் உள்ளார். நம்மை அளவு கடந்து நேசிக்கும் ஆண்டவரைத் தவிர வேறு யார் நமக்கு அவருடைய வழியை போதிக்கமுடியும்? (ஆப.2:19). ஆகவே தேவனோடு நாம் நெருங்கிய உறவு கொள்ளும்பொழுது, அவர் நம்மோடு பேசுகிறதை பல வகைகளிலே பார்க்க முடியும்.

ஆனாலும், கிறிஸ்தவர் களில் பலருங்கூட, நாள்-நேரம் பார்ப்பது, கிரகம் பார்ப்பது, நட்சத்திரம் பார்ப்பது, சகுனம் பார்ப்பது போன்ற புறஜாதியாரின் அருவருப்பான பழக்கங்களை தங்களுடைய வாழ்வில் அனுமதித்து இருக்கிறார் கள். எவ்வளவு கேவலமான நிலைக்கு இன்று கிறிஸ்தவம் சென்று கொண்டிருக் கிறது. புறமாகத்தினர் நல்ல நாள் என்று சொல்லும் நாளில்தான் கிறிஸ்தவ கோவில்களில் அடிதடியோடு பல திருமணங்கள் அரங்கேற்றப்படுகின்றன. இவை களிலிருந்து நமக்கு முற்றிலு மாக ஒரு மனமாற்றம் தேவை. ஒன்று அனலாக இருக்கவேண்டும் அல்லது குளிராக இருக்கவேண்டும் இதற்கு இடையில் வெது வெதுப்பாக இருந்தால் வாந்திபண்ணி போடுவதாக ஆண்டவர் சொல்லு கிறார் (வெளி.3:15,16). இஸ்ரவேல் மக்களை கானான் தேசத்திற்கு ஆண்டவர் அழைத்துச் சென்றபொழுது அவர்களுக்கு கொடுத்த கட்டளை இதுதான்: ‘‘கடவு ளாகிய ஆண்டவர் உனக்குக் கொடுக்கும் நாட்டுக்குள் போனபின், அந்த வேற்றினத்தாரின் அருவருப்புகளைக் கடைபிடிக்காதே. தன் புதல்வனை அல்லது

புதல்வியை தீ மிதிக்கச் செய்கிறவனும், குறிசொல்கிறவனும், நாள் பார்க்கிற வனும், சகுனங்களை நம்புகிறவனும், சூனியக்காரனும், மந்திரவாதியும், ஏவி விடுகிறவனும், மாயவித்தைக்காரனும், இறந்தவர்களிடம் குறிகேட்கிறவனும் உங்களில் இருத்தலாகாது.'' (உபா-18:9-14).

தாவீது ஜெபித்தது போல நாமும் ஆண்டவரே, என்னோடு கூட பேசும், எனக்கு போதித்து உமது வழியை எனக்குக் காட்டும் என்று கேட்போமாக.

**3. இருதயம் ஒருமுகப்படுத்த ஜெபம்: வச.11பி** ''நான் உமது நாமத்திற்குப் பயந்திருக்கும்படி என் இருதயத்தை ஒருமுகப்படுத்தும்.'' இருதயத்தை ஒருமுகப் படுத்துதல் என்பது ஒரு சிறந்த ஆவிக்குரிய ஒழுங்காகும். பல நேரங்களில் நமது சிந்தனைகள் சிதறி நம் மனம் அலை பாய்கிறது. ஆகையால், மனதை நிலைப்படுத்தி வேதத்தை வாசிப்பதற்கோ அல்லது இறைவனிடம் மன்றாட்டு செய்வதற்கோ இயலாமல் பல நேரங்களில் நாம் தள்ளாடுகிறோம். ஆண்டவர் இப்படிப்பட்ட சமயங்களில் நமக்கு உதவி செய்யக்கூடும் என்பதை தாவீது இங்கே எடுத்துக் கூறுகிறார்.

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்களாகிய நமக்கு எப்படி நமது மனதை ஒருமுகப்படுத்த முடியும் என்பதற்கு சில ஆலோசனைகள் கொடுக்கப்பட்டுள்ளது. ''நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்'' (ரோம-12:2). மனம் எப்படி புதிதாக முடியும்? ''கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்க முள்ளவைகளெவைகளோ, நீதியுள்ள வைகளெவைகளோ, கற்புள்ளவைக ளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவை களோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக் கொண் டிருங்கள்'' (பிலி-4:8). ஆண்டவர் தாமே நாம் அவருடைய பிள்ளைகளாக வாழும் சிலாகியத்தை நமக்குத் தந்து ஒருமுக இருதயத்தோடு அவரை தொழுதுகொள்ள உதவிசெய்வாராக.

**முடிவுரை:** நமது ஆத்துமாவைக் குறித்து நாம் அக்கறை உள்ளவர்களாக இருக்க ஆண்டவர்தாமே நமக்கு உதவி செய்வாராக. ஆண்டவருடைய வார்த்தை களை தியானிப்பதன் மூலமாகவும், அதை நம் வாழ்வில் அப்பியாசம் செய்வதின் மூலமாகவும் நமது உள்ளான மனிதனை, இறைவன் தாம் விரும்பும் பாத்திரமாக வனைய ஒப்புக்கொடுப்போம். இறைவனுடைய உன்னத வழிகளை, அவரது திருவுளச் சித்தத்தை அறிந்து, நமது மனதை ஒருமுகப்படுதுவோம்.

கடவுள்தாமே தமது கிருபையைத் தந்து, நம் வாழ்நாள் பரியந்தம் நம்மை அவருடைய வழியில் காப்பாராக. ''கர்த்தாவே, நீர் எனக்கு துணைசெய்து என்னை தேற்று கிறதை என் பகைஞர் கண்டு வெட்கப்படும்படிக்கு, எனக்கு அநுகூலமாக ஒரு அடையாளத்தை காண்பித்தருளும்'' (வச-17).

ஆண்டவருடைய ஆசி உங்களோடு இருப்பதாக. ஆமென்.

சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள். தொடரும்......

ஆசிரியர்: அருட்திரு. அறிவர். டி. சுரேஷ் ராஜன், இணை நிறுவனர், வேதாகம மொழிபெயர்ப்பு முயற்சிகள், கோயம்புத்தூர். தென்னிந்தியா.

# வேதாகம போட்டி–164 சரியான பதிலளித்தோர்

1) அமலியா லோகநாதன் TVM
2) அமிர்தகனி பொன்ராஜ் CHE
3) அன்பு சுதந்திரம் TIN
4) ஏஞ்சல் சி. TIN
5) ஏஞ்சல் ராஜதுரை CHE
6) ஏஞ்சலின் ரூஸ்வெல்ட் CHE
7) ஏஞ்சலின் வில்லியம்ஸ் CHE
8) அன்னாள் ஜெபக்கனி CBE
9) அனி பாய் ஜாண் TIN
10) அரோமா சாத்ராக் TIN
11) ஆர்தர் மாசில்லாமணி CHE
12) அருள்செல்வி VIR
13) அருள்செல்வி ஜாண்ஸன் TIN
14) பாமா மாதவன் KAL-AP
15) பெல்சி தங்கராஜ் CHE
16) பெனிட்டா பிராங்க்ளின் CHE
17) பெ.ட்டி பிரின்ஸ் CHE
18) பியூலா ஜேசுராஜன் PON
19) பியூலா ராஜசெல்வன் CBE
20) செலினா பென்சி வில்சன் DR, KUW
21) செலினா வின்செண்ட் TIN
22) சந்திராபாய் மாசிலாமணி AVD
23) சந்திரலேகா KAL-AP
24) சந்திரா மேரி விஜயன் BAN
25) சந்திரா சாமுவேல் TIN
26) சார்லஸ் ஃபின்னி DR CHE
27) சார்லட் டேவிட் CHE
28) சித்ரா பெஞ்சமின் TVL
29) கிறிஸ்டல் ஜாய் யோபு CKA-TPT
30) கிறிஸ்துதாஸ் GOP
31) கிறிஸ்டி ஆயிட்டஸ் MAR TIN
32) கிறிஸ்டி ஞானராஜ் CHE
33) கிறிஸ்டி மெர்சி ராஜ்குமார் TUT
34) கிறிஸ்டி பொன்னுசாமி MDU
35) சிசிலி புஷ்பம் டேவிட் CHE
36) சிந்தி ஜோஷ்வா TNJ
37) டெய்ஸி ஜெபதாஸ் TCY
38) டெய்ஸி சாம் KAL-AP
39) டேனியல் தாமஸ் TIN
40) டேனிங் சொர்ணா ஜெஸ் TIN
41) டேவிட் ஜே.ஆர். CHE/CBE
42) தெபோராள் D. CHE
43) டெல்வின் இம்மானுவேல் CBE
44) தேவமணி ஆபிரகாம் TUT
45) தேவநேசம் ராஜாசிங் CHE
46) டோராபாய் CHE
47) எலிசபெத் செல்லத்துரை CHE
48) எமிமாள் மில்டன் CHE
49) எஸ்தர் D.R. TIN
50) எவாஞ்சலின் ஜோன்ஸ் DR. SLM
51) குளோரி ரவீந்திரன் TIN
52) ஞானம் ஜெபராஜ் TIN
53) ஞானம் பிலிப் CBE
54) ஞானசெல்வி மோசஸ் NJ-USA
55) ஞானசுந்தரி நாகராஜன் TIN
56) கோல்டா ஜேசுபாதம் MUM
57) கிரேஸ் டேனி TEN
58) கிரேஸ் பொன்மணி ரெக்ஸ் CHE
59) கிரேஸ் பிரின்ஸ் APM-TEN
60) கிரேஸி கிறிஸ்டோபர் CHE
61) கிரேனா அன்புரோஸ் CHE
62) கிரேஸியா ஜெயபால் CHE
63) கிரிசெல்டா செய்லர் CHE
64) குணவதி ஜெபமணி CHE
65) ஹெலென் ஜான்சிராணி TIN
66) ஹெலென் ஜெனிபர் பாண்டியன் CHE
67) ஹெலன் திலக் TUT
68) ஹேமா அஜீத் CHE
69) ஹேமா கேப்ரியேல் BAN
70) ஹேனா ஜெபவதி TCY
71) ஹெப்சி அசரியா PON
72) ஹெப்சிபா மங்களராஜ் TIN
73) ஹிம்லா ராஜகுமாரி CHE
74) இளவரசி ஜோபிதா CBE
75) இன்பவல்லி கலைச்செல்வன் MDU
76) இந்திரா கெத்ஸி டேவிட் DR. TIN

77) ஜமீலா செல்வராஜ் CHE
78) ஜேன் தர்மராஜ் MAR
79) ஜேன்ஸ் (ஜான்ஸி) ANI
80) ஜான்ஸி சந்தியா MAR TIN
81) ஜாஸ்மின் ஞானதாஸ் CHE
82) ஜெபா ஜெயராஜ் AVD
83) ஜெபக்குட்டி மோசஸ் TIN
84) ஜெபரஞ்சிதம் மெர்லின் TUT
85) ஜெபசீலி கிளின்டன் CHE
86) ஜெபா சீனி MAR TIN
87) ஜீவா டேவிட் சாலோமோன் APM-TEN
88) ஜெமீலா நிக்ஸன் CHE
89) ஜெனிலா CHE
90) ஜென்ஸி ஞானேஷ் MUM-MS
91) ஜெனித்தா செல்வின் TIN
92) ஜெரின் ஸ்டீபன் MUM
93) ஜெஸி செல்லதுரை CBE
94) ஜெஸி ஜெயக்குமார் TIN
95) ஜெஸிதா அகஸ்டின் KUR-AP
96) ஜெயா ஆல்பர்ட் KUM
97) ஜோனா ஸ்டீபன் AVD
98) ஜோஸ்பின் ஜெஸி CHE
99) ஜாய்ஸ் பாண்டியன் CHE
100) ஜூலியட் ஜெயக்குமார் TIN
101) கலா கிருபாகரன் TIN
102) கலையரசி செல்வராஜ் CHE
103) கஸ்தூரி எலியாஸ் TIN
104) கிருபாவதி S. CHE
105) கோயில்பிள்ளை ஞானத்தாய் APM
106) லீலா டேவிட் CHE
107) லீலா ஜோஸப் CBE
108) லில்லி ஜாண்ஸன் CHE
109) லிஸி டென்சிங் TIN
110) மல்லிகா ஜாய்ஸ் (ஜஸ்டினா) JAY
111) மல்லிகா V. CHE
112) மணிமேகலை ஜெயக்குமார் TIN
113) மரிய பாப்பா CHE
114) மரியாள் ஜே.எஸ். TUT
115) மெஜிலா ஜோஷ்வா TUT
116) மெரிட்டா ஜெயபாலன் TCY
117) மியூரியல் புஷ்பராஜ் CHE
118) நிக்ஸன் எவர்பிரைட் TIN
119) ஆலிவ் ஜெயபாலன் CBE
120) பாக்யபாய் ஆரோன் TIN
121) பெர்சி பால் பொன்சிங் TUT
122) பிங்க்லின் சந்தோஷ் CHE
123) பொன்மணி உத்தமசிங் TUT
124) பிரேமா ஜானி TEN
125) பிரேமா ஸ்டாலின் CHE
126) பிரேம்குமாரி ஜெய்சிங் CHE
127) பிரின்ஸ் தயாநிதி CHE
128) பிரின்ஸ்லின் ஷைனி APM-TEN
129) பிரிசில்லா தாஸ் CHE
130) பிரிஸ்கில்லாள் சசி CBE
131) பிரியா ராஜ்குமார் CHE
132) ரேச்சல் ஈஸ்டர் VEL
133) ராஜபிரமீளா TPT
134) ராஜகுமாரி சன்னியசிமுத்து TUT
135) ராஜ்மேரி சார்லஸ் KER
136) ரமோலா அதிசயராஜ் TIN
137) ராணி ஃபுளோரா APM-TEN
138) ராணி பிரபாகர் TIN
139) ராணி சாமுவேல்ராஜ் CHE
140) ரோஸ்லின் மார்கிரெட் CHE
141) ரோஸி ஸ்டீபன் CHE
142) ரூபவதி நோபிள் TIN
143) ரூத் HAPP-TCY
144) ரூத் ஜாண்ஸன் TIN
145) சலோமி மனோகர் DR. CHE
146) சம்பு ஜெயசந்திரன் MDU
147) சாமுவேல் டேவிட் TPT
148) சாரா பாலசிங் MDU
149) சரோஜா செல்வராஜ் CHE
150) சரோஜினி எலிசபெத் CHE
151) சீலியா MS. T. APM-TEN
152) செல்வ பென்ஸி ஆபேல் KOT-AP
153) செல்வராஜ் K. CBE
154) செல்வராணி ஆல்பர்ட் CHE
155) செல்வி S. CHE
156) செல்வி அமிர்தராஜ் TVR

## வேதாகம போட்டி–164 சரியான பதிலளித்தோர் – 11ம் பக்கத் தொடர்ச்சி

157) ஷாலி எடிசன் CHE
158) சாந்தி ஆல்பர்ட் PCT
159) சாந்தி ஜெயசீலன் CHE
160) சாந்தி ரோஸ் CBE
161) ஷர்மிளா செல்வராஜ் DR. CUD
162) ஷேபா சந்தோஷ் CHE
163) ஷீபா சாம்ஸன் CHE
164) ஷீலா G. PNR-TVL
165) ஷீலா இஸ்ரேல் TCY
166) ஷெரீன் ஜெபராஜ் PNR-TVL
167) சில்வியா ஃபின்னி DR. CHE
168) சவுந்தரம் சாலமோன் CHE
169) ஸ்டெல்லா டேவிட் TUT
170) டெல்லா கனகராஜ் CHE
171) சுகிர்தா ஆல்வின் CHE
172) சுஜாதா சாமுவேல் CHE
173) சுமித்ரா B. CHE
174) சுசீலா தியோடர் TCY
175) சுவர்ணலதா அற்புதராஜ் CHE
176) தனசீலி ஞானராஜ் CHE
177) தெல்மா ஸ்டேன்லி MDU
178) உமா குளோரி CHE
179) வனஜா ஹெர்பர்ட் TIN
180) வசந்தா அன்பன் TIN
181) வசந்தா சந்திரசேகர் CBE
182) வசந்தா துரைராஜ் OFT-TCY
183) வசந்தி கருணாகரன் CHE
184) வசந்தி வாசன் CHE
185) விஜி டேனியல் CHE
186) விமலா ஜெயக்குமார் TUT
187) விண்ணரசி ரோஸ் CHE
188) வினோலியா ஜேம்ஸ் TUT
189) வினோலியா வில்சன் VAN
190) வைலட் கிறிஸ்டோபர் TIN
191) வைலட் சைரஸ் TIN

## வேதாகமப் போட்டி-163 சரியான பதிலளித்தோர்

1) பெ.ஃட்டி பிரின்ஸ்
2) சிந்தி ஜோஷ்வா
3) ரோஸி ஸ்டீபன்
4) செல்வ அமுதா ஜார்ஜ்
5) ஷீலா PAN-TVR
6) வைலட் சைரஸ்

## வேதாகம போட்டி–164 சரியான விடைகள்
## (கலாத்தியர் முதல் கொலோசெயர் வரை)

1. எப்பாபிரோதீத்து பிலி:-2:30
2. யாக்கோபைத் தவிர கலா:-1:19
3. விசுவாச மார்க்கத்தார் கலா:-3:9
4. அக்கிரமங்களில் எபே:-2:5
5. வயிறு, இலச்சை பிலி:-3:18-19
6. மேலான எருசலேம் கலா:-4:26
7. யூதேயா கலா:-1:22
8. வேலைக்காரர் கொலோ:-3:22
9. சரி - கொலோ:-3:2
10. தவறு - எபே:-4:27
11. தவறு - பிலி:-2:5
12. சரி - கலா:-4:18
13. ஆ - இயேசு கிறிஸ்து எபே:-1:6
14. ஆ - விசுவாசத்தில் கொலோ:-2:7
15. ஆ - நல்மனதோடு எபே:-6:8
16. ஈ - கிறிஸ்து மரித்தது கலா:-2:21
17. ஆகார் கலா:-4:22-26
18. பரிசுத்த ஆவி எபே:-1:13
19. மாம்ச. கிரியைகள் கலா:-5:19-23
20. இரட்சிப்பு எபே:-2:8,9

# வேதாகம போட்டி-165

வேத–பகுதி: 1,2 – தெசலோனிகேயர், 1,2 – தீமோத்தேயு, தீத்து நிருபங்கள்

வேதவசன இருப்பிடத்துடன் பதிலளிக்க கடைசிநாள்: 25–07–2024

1. அவனவன் தன்தன் சரீர பாண்டத்தை எப்படி, எப்படி, ஆண்டுகொள்ளவேண்டும்?

2. இந்த ஜீவனுக்கும் இதற்கு பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளது: இதுஎன்ன?

3. இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசைவைத்து, பவுலை பிரிந்து, தெசலோனிக்கே போனது யார்?

4. பாலிய ஸ்திரீகளை யாரைப்போல் பாவித்து, புத்திசொல்லவேண்டும் என்கிறார் பவுல்?

5. தூங்குகிறவர்கள் தூங்குவதும், வெறிகொள்ளுகிறவர்கள் வெறிகொள்வதும் எப்போது?

6. ரோமாவில் வந்தபோது அதிக ஜாக்கிரதையாய் பவுலை தேடி கண்டுபிடித்தது யார்?

7. இரண்டொருதரம் புத்தி சொன்னபின்பு அவனைவிட்டு விலகவேண்டும்: யாரை விட்டு?

8. பொய்யை விசுவாசிக்கத்தக்கதாக, தேவன் எதை அனுப்புவார்?

9. ‘கண்காணிப்பை விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்புகிறான்’ - **சரியா தவறா**?

10. ‘பிரயாசப்பட்டு போரிடுகிறவன் பலனில் முந்தி பங்கடையவேண்டும்’ - **சரியா தவறா**?

11. ‘தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்’ - **சரியா தவறா**?

12. ‘தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது’ - **சரியா தவறா**?

13. மக்கெதோனியாவிலும் அகாயாவிலுமுள்ள ‘**இவர்கள்**’ யாவருக்கும் மாதிரிகள்:
அ) சகோதரர் ஆ) சகோதரிகள் இ) சீடர்கள் ஈ) விசுவாசிகள்

14. ‘**இவர்கள்**’ ஓயாப்பொய்யர், துஷ்டமிருகங்கள், பெருவயிற்றுச் சோம்பேறிகள்:
அ) மெலித்தா-தீவார் ஆ) சீப்புரு-தீவார் இ) கிரேத்தா-தீவார் ஈ) மதுபான-பிரியர்

15. சகோதரரே, நீங்கள் ‘**இதை**’ செய்வதிலே சோர்ந்துபோகாமலிருங்கள்:
அ) தானதர்மம் ஆ) ஊழியம் இ) நியாயம் ஈ) நன்மை

16. சிலர் நல்மனச்சாட்சியை தள்ளிவிட்டு, விசுவாசமாகிய ‘**இதை**’ சேதப்படுத்தினார்கள்:
அ) ஆணிவேரை ஆ) கப்பலை இ) நங்கூரத்தை (ஈ) தேவபக்தியை

17. கடவுள் நான் என்பான், கடவுளுக்கு மேல் என்பான்! எல்லாம் நான் என்பான்! எல்லாவற்றுக்கும் மேல் என்பான்! ஆலயத்தில் அமர்ந்திடுவான், காலத்தில் வெளிப்படுவான்! **இவன் யார்?**

18. வந்தது இது வந்தது, வசனத்தோடு வந்தது! வல்லமையாய் வந்தது, விசுவாசம் தந்தது! ஆவியோடு வந்தது, ஆவியின் மகிழ்ச்சி தந்தது! நிச்சயத்தோடு வந்தது, பிரசித்தம் ஆயிற்று! **இது என்ன?**

19. பாவிக்கு விதிக்கப்பட்டது இது, பரிசுத்தருக்கு அல்ல! பதிமூன்று வகை மனிதருக்காய் இது, பதிமூன்றுக்கு மேலும் உண்டு! நல்லோருக்கு நல்லது, கெட்டோருக்கு கெட்டது! **இது என்ன?**

20. விசுவாச மூதாட்டி! விசுவாச முன்னோடி! விசுவாசப் பேரனின் பாட்டி! **இவர் யார்?**

பதிலளிக்க கடைசி நாள்: 25-07-2024 படைப்பாசிரியர்: அருட்திரு.எஸ்ஜேடி. தர்மராஜா

பதில் அனுப்பவேண்டிய முகவரி: திருமதி. ஜெயசீலி தர்மராஜா, எஃப்–1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை–93. வாட்ஸ்–அப்: 9789914463

# கர்த்தருடைய நாமங்களின் மகத்துவங்கள்

EPISODE-62
பாகம்-62


SIS.C. ANGEL

கர்த்தர் நியாயக்கேடில்லாத சத்தியமுள்ள தேவன்; அவர் நீதியும் செம்மையுமானவர். உபாகமம்–32:4

The Lord is a God of truth without iniquity; He is just and right. Deut-32:4

FAITHFUL GOD WITHOUT INIQUITY EL EMUOONAH VEYEIN AVEL

## நியாயக்கேடில்லாத சத்தியமுள்ள தேவன்

'ஏல் எமுவூனா வேயீன் ஆவெல்'

முகதாட்சண்யம் இல்லாதவராய், தேவனுடைய மார்க்கத்தைச் சத்தியமாய் போதிக்கிறவரின் நாமத்தில் இரட்சிப்பின் விசுவாசிகளுக்கு ஜுலை மாத துதியின் வாழ்த்துக்கள்.

**சங்-33:4** கர்த்தருடைய செய்கையெல்லாம் சத்தியமுமாயிருக்கிறது.

**சங்-89:14** கிருபையும் சத்தியமும் உமக்கு முன்பாக நடக்கும்.

**வெளி-15:3பி** நீதியும் சத்தியமுமான தேவரீருடைய வழிகள் திறக்கப்படுவதற்காய் ஸ்தோத்திரம்.

**யோவா-8:26** உங்களைக் குறித்துப் பேசவும் நியாயந்தீர்க்கவும் எனக்கு அநேக காரியங்களுண்டு. என்னை அனுப்பினவர் சத்தியமுள்ளவர்; நான் அவரிடத்தில் கேட்டவைகளையே உலகத்துக்குச் சொல்லுகிறேன்.

**என்ன சொல்லுகிறார்? யோவா-14:6:** நானே (இயேசுவே) வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன்; என்னையல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.

**யோவா-8:32** சத்தியத்தை (இயேசுவை) அறிவீர்கள்; சத்தியம் உங்களை (உலகத்தின் பாவத்தினின்று) விடுதலையாக்கும்.

**யோவா-8:45,46,47** என்னை விசுவாசிக்கிற நீங்கள் அனைவரும் தேவனால் உண்டானவர்கள்.

**ஜெபம்:** இயேசுவே கிறிஸ்துவென்று அறிந்து அறிக்கையிடுகிறோம், துதிக்கிறோம். (1யோவா 2:21-23, 27). உம்முடைய சத்தியத்தினாலே எங்களைப் பரிசுத்தமாக்கும் (யோவா 17:17-19). உம்முடைய சத்தியத்தினாலே எங்களை அபிஷேகித்து, சத்தியமாக எங்களுக்குள் நிலைத்திருப்பீராக. சகலத்தையம் போதிப்பீராக. எங்களுக்காக நீர் பிதாவானவரிடம் வேண்டுதல் செய்வதற்காக உமக்கு ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தினால் ஜெபிக்கிறோம் பிதாவே, ஆமென்.

கிறிஸ்துவுக்குள் உங்கள் அன்பு சகோதரி
C. Angel

தொகுப்பு: சகோ.C. ஏஞ்சல் B.Sc திருநெல்வேலி, தென்னிந்தியா

தேன்-துளி வேத வசனக் கதை-158

# வைர கிரீடம் யாருக்கு?

சகோ. M. அசரியா ஞானதாஸ் M.A., M.ED.

இந்தியாவில் வாழ்ந்த ஒரு தேவமனிதர் மாபெரும் ஆத்தும ஆதாய ஊழியம் செய்துவந்தார். அவர் ஆயிரக்கணக்கான மைல்கள் பிரயாணம் செய்து தனது செய்தியின்மூலம் லட்சக்கணக்கான மக்களை கிறிஸ்துவுக்கென்று ஆதாயம் செய்த ஒரு வல்லமையான ஊழியராவார். அவர் ஒரு நாள் தனது படுக்கையில் படுத்திருந்த போது கனவில் பரலோக காட்சியை கண்டார். பரலோகத்தில் ஆயிரக்கணக்கான அறைகள் இருந்தன. அந்த அறைகளை அவருக்கு காட்டுவதற்காக ஒரு தேவதூதன் அவருடன் வந்துகொண்டிருந்தான். அவர் பார்த்துக்கொண்டே வந்தபோது ஒரு அறையில் மட்டும் ஒரு மகிமையான காட்சியைக் கண்டார். அந்த அறையில் ஆயிரக்கணக்கான கிரீடங்கள் வைக்கப்பட்டிருந்தன அவற்றில் மூன்று கிரீடங்கள் மட்டும் மகிமையாய் ஜொலித்துக்கொண்டிருந்தன. இதைக்கண்ட அந்த தேவமனிதர் தான் இந்தியா முழுவதும் மிகுந்த வல்லமையோடு ஊழியம்செய்து லட்சக்கணக்கான ஆத்துமாக்களை ஆதாயம் செய்துள்ளதால் அந்த மூன்று வைர கிரீடங்களும் தனக்கே கிடைக்கும் என எண்ணி அவற்றை நெருங்கினார். ஆனால் உடன் வந்த தேவதூதன் அவரை நோக்கி, ‘‘ஐயா! உங்களுக்கு ஒரே ஒரு வைர கிரீடம்தான் ஒதுக்கப்பட்டுள்ளது மற்ற இரண்டு வைர கிரீடங்களும் உங்கள் சபையிலுள்ள காது கேட்க்காதவர் மற்றும் கண் பார்வையற்றவர் ஆகிய இருவருக்கும் வழங்கப்படவுள்ளன’’ எனக் கூறி அவரை தடுத்துவிட்டான்.

இதைக்கேட்ட அந்த தேவமனிதர் சற்று குழப்பத்துடன் தேவதூதனைப் பார்க்க, தேவதூதன் அவரை நோக்கி, ‘‘ஐயா! உங்கள் ஊழியம் மூலமாகவும், மாத்திரமல்ல உலகம் முழுவதும் நடைபெறும் அனைத்து ஊழியங்கள் மூலமாகவும் கோடிக்கணக்கான மக்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என ஜெபித்த அந்த இரண்டு பேருக்கும்தான் இந்த கிரீடங்கள்’’ என விளக்கம் அளித்தான். இதைக்கேட்ட அவர் தனது தவறான சிந்தனைக்கு மனம் வருந்தி, தன் எண்ணத்தை மாற்றிக்கொண்டார்.

பிரியமானவர்களே! நாமும்கூட, இந்த தேவமனிதரைப்போல் வல்லமையான ஊழியர்களுக்கு மட்டும்தான் பரலோகில் வைர-கிரீடம் உண்டு என்ற தவறான எண்ணத்தை விட்டுவிடுவோம். சுவிசேஷ ஊழியங்கள் மூலமாக கோடாகோடியாக ஆத்துமாக்கள் ஆதாயம் பண்ணப்பட ஜெபிப்பதன் மூலமாகவும், பல்வேறு ஊழியங்களில் பங்குபெறுவதன் மூலமாகவும், கடவுள் கொடுத்த தாலந்துகளை அவருக்காக பயன்படுத்துவதன் மூலமாகவும் பரலோக-வைர-கிரீடங்களை பெற தகுதியடைய முடியும் என்பதை நினைவில்கொண்டு, சுவிசேஷ ஊழியங்களில் அர்ப்பணிப்போடு செயல்பட்டு, வைர-கிரீடங்களை பெற்று, பரலோக மகிழ்ச்சியுடன் ஆசீர்வதிக்கப்பட்ட வாழ்வு வாழ உங்களை அன்புடன் வாழ்த்துகிறேன்.

வேதம் இவ்வாறு கூறுகிறது:

எனக்கு ஊழியஞ்செய்கிறவர்களை பிதாவானவர் கனம்பண்ணுவார். யோவா–12:26

அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள். கலா–5:13

அன்பினால் ஒருவரையொருவர் தாங்குங்கள். எபே–4:2



சகோ. அசரியா

Bro. M. Azariah Gnanadoss M.A., M.Ed.
Editor, ‘Ratchippu’ Tamil Christian Monthly Magazine, Chennai-93. Mobile: 9962924900

# இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு

1ம் நூற்றாண்டு முதல் 21ம் நூற்றாண்டு வரை

EPISODE 24

# இரண்டாயிரம் ஆண்டு வரலாறு..
# இரண்டாம் வருகைக்குத் தயாராகு...

கட்டுரை ஆசிரியர்
அறிவர். திருமதி. சலோமி மனோகர்




இந்திய திருச்சபை சரிதை:
(1முதல் 21ம் நூற்றாண்டுவரை)
தொகுதி-5 பகுதி-4

**5. ஜெசுவைட்ஸும் இந்திய திருச்சபையும்**

**4. வெற்றிகள் மற்றும் தோல்விகள்**

புனித பிரான்சிஸ் சேவியரின் வருகை, தமிழ்நாட்டில் இயேசு சங்கத்தின் தோற்றத்தை குறிக்கிறது. கி.பி.1542ல் இந்திய மண்ணில் கால் பதித்த அவர், தமிழ்நாட்டின் தென் பகுதியில் நற்செய்தியைப் பிரசங்கித்தார். கிறிஸ்துவின் முகத்தை அறிமுகப்படுத்த சுமார் 38,000 மைல்கள் பயணம் செய்து வந்த அவர் தனது மிஷனரி நடவடிக்கைகளில் வைராக்கியமாக இருந்தார். இந்த முதல் ஜெசுவைட்டுக்கு தமிழ்நாட்டு விசுவாசிகள் அதிக கடன்பட்டிருக்கிறார்கள்.

முடிவில் கோவாவில் பால் ஆ.ஃப கமெரினோ என்ற ஒரு ஜேசுயிட் மட்டுமே இருந்தார். அவர் கல்லூரிப் பணியில் தீவிரமாக ஈடுபட்டார். பல ஆண்டுகளாக இயங்கிய இந்த கல்லூரியில் 13 முதல் 21 வயதுடைய பல இளைஞர்கள் இருந்தனர். புனித சேவியர், ஃபாதர் பால் மேற்கொண்டு வரும் பணிக்கு ஒப்புதல் அளித்து இருந்தார். ஃபாதர் பால், கோவாவில் உள்ள ஹோலி ஃபெய்த் கல்லூரியில் ஆசிரியராகவும் பாதிரியாராகவும் தனது கடமைகளுக்கு மேலதிகமாக கல்லூரியின் நிர்வாக மற்றும் நிதிப் பணிகளை மேற்கொள்வது அவருக்கு சாத்தியப்படவில்லை. ஆகவே, இவை அனைத்தும் நான்கு பொறுப்பாளர்கள் கொண்ட ஒரு கமிஷனின் பொறுப்பில் விடப்பட்டது. கி.பி.1544ம் ஆண்டில், இளம் இத்தாலியரான, ஆண்டனி கிரிமினாலி கோயம்புராவில் பாதிரியாராக நியமிக்கப்பட்டார். கல்லூரியில், நிக்கோலஸ் லான்சிலோட்டோ என்பவர் லத்தீன் ஆசிரியராக நியமிக்கப்பட்டார்; லான்சிலோட்டோ, மாணவர்களின் மொழிகள் மீது கவனம் செலுத்தினார். போர்த்துகீசியம் கற்பதற்கு மாணவர்களின் வீட்டில் பேசிய மொழிகள் பிரச்சனையாக இருந்தன. அவர்களுக்கு போர்த்துகீசியம் கற்பதால் எந்தப் பயனும் இல்லை; இதனால், லத்தீன் முக்கிய மொழியாக கற்பிக்கப்பட்டது.

புனித சேவியர் இல்லாத போது டொமினிகன்களின் வருகையால் கிறிஸ்தவப் படைகள் பலப்படுத்தப்பட்டன. இரண்டு குறிப்பிடத்தக்க ஞானஸ்நானங்கள் கிறிஸ்தவருக்கு உற்சாகத்தைக் கொடுத்தன.

முதலாவதாக, கி.பி.1548 அக்டோபர் 21ல் ஆளுநரின் நெருங்கிய நண்பரும், 25 ஆண்டுகள் போர்த்துகீசிய அரசுப்பணியில் இருந்தவரும், கடன்-சுமை குற்றவாளி ஆனவருமான பிராமணர் லோகு, கிறிஸ்துவின் சத்தியத்தை நம்புவதாக அறிவித்தார். கிறிஸ்தவரானதால் தனக்கு சிறையிலிருந்து விடுதலை கேட்கவில்லை மாறாக, கிறிஸ்தவ பக்தி மற்றும் ஞானஸ்நானம் மட்டுமே தனக்கு வேண்டும் என்றார். லோகு, அவரது மனைவி, அவரது மருமகன், இரண்டு கிராமத் தலைவர்கள் மற்றும் ஒரு பெண் ஆகிய ஆறு பேருக்கு பிஷப் ஞானஸ்நானம் கொடுத்தார். ஞானஸ்நானம் பெற்றவர்கள் குதிரையின் மீது தெருக்களில் சவாரி செய்தனர். எட்டு நாட்கள் நீடித்த இந்த விழாவில் இந்துக்கள் பலர் பங்கேற்றனர்.

இரண்டாவதாக, 1549ல் குட்டி சமஸ்தானங்களில் ஒன்றான தனூரின் ராஜா. அப்போது தென்னிந்தியா பிளவுபட்டது. ஜாமோரின் அவருக்கும் அவரது அண்டை வீட்டாருக்கும் இடையே கணிசமான பகையை ஏற்படுத்தினார். தனூர் ராஜா போர்த்துகீசியர்களின் நட்பை விரும்பினார். உதவி பெறும் எண்ணத்தைவிட அவர் தனது இரட்சிப்புக்காக மட்டுமே ஞானஸ்நானம் ஏற்க விரும்பினார். ஆயினும் அவருடைய ஞானஸ்நானம் இரகசியமாக வைக்கப்பட வேண்டும் மேலும் அவரது வெளிப்புற தோற்றத்தில் மாற்றங்கள் எதையும் செய்ய வேண்டிய அவசியமில்லை என்ற நிபந்தனையின் பேரில் மட்டுமே ஞானஸ்நானம் பெற்றார்.

தனூர் ராஜாவின் அரசில் பலர் இரகசிய கிறிஸ்தவர்களாக இருந்தனர், சாதிய வேறுபாடுகள், சமூக ஒழுங்கின்மைதானே தவிர வேறில்லை என்று நம்பினார்கள். கி.பி.1548 அக்டோபர் 21ல் ஞானஸ்நானம் ஒரு பொது நிகழ்வாக மாற்றப்பட்டது.

சீனாவில் மிஷனரியாகப் பணியாற்றிய இத்தாலிய ஜேசுயிட் மேட்டியோ ரிச்சி, 16ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 17ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் மதுரை போதகரானார். மதுரை பகுதி மக்கள் இவரை ‘தத்துவ போதகர்’ என்று அழைக்கலாயினர். இவர், யாராயினும் கிறிஸ்தவர்கள் ஆனதும் தம் சாதியையோ சாதிப் பழக்கவழக்கங்களையோ விட்டுவிடத் தேவையில்லை என்றார். தொடர்ந்து குடுமி வைத்திருக்க. பூனூல் அணிய, பொங்கல் கொண்டாட (கிறிஸ்தவ ஜெபங்களோடு) அனுமதித்தார். சாதிப்பழக்கங்கள் சமூகப் பழக்கங்களே தவிர சமயப் பழக்கங்கள் அல்ல என்பது தத்துவ போதகரின் வாதம். ரிச்சியின் மரணத்திற்குப் பிறகு கி.பி.1742ல் இவை கிறிஸ்தவ வழிபாடு மற்றும் கோட்பாட்டிற்கும் பொருந்தாதவை என்று கூறப்பட்டது.

கி.பி.1711ல் இருந்து 1747வரை இத்தாலியிலிருந்து மதுரை வந்து பணியாற்றிய ஜோசப் கான்ஸ்டன்டைன் பெஸ்கி என்பவர் தமிழகத்தில் ‘வீரமாமுனிவர்’ என இறவாப் புகழ் பெற்றவர் ஆவார். கொடுந்தமிழ் இலக்கணம், செந்தமிழ் இலக்கணம், தொன்னூல், சதுரகராதி, தமிழ்-இலத்தீன் அகராதி போன்ற நூல்களை எழுதிய வீரமாமுனிவரின் பணி ஒரு தமிழ்-சேவை மற்றும் அவர் தமிழன்னைக்கு சூட்டிய அணிகலன்களாகும். உபதேசிமாரின் பயனுக்காக அவர் எழுதிய நூல் ‘வேதியர் ஒழுக்கம்’ ஆகும்.

கி.பி.1589ல் கிறிஸ்தவ பரவர்களுக்கும் இந்து நாடார்களுக்கும் இடையே சண்டை மூண்டது. மதமாற்றிய கிறிஸ்தவர்கள் தங்கள் பழைய சாதி-மத பழக்கவழக்கங்களை விட்டு விடாததினால் பழைய கிறிஸ்தவர்களிடமிருந்து பலத்த எதிர்ப்பு எழுந்தது. இதனால் 14 ஆண்டுகள் சண்டை நடந்தது. கி.பி.1759ல் போர்ச்சுக்கல் மன்னர், ‘இயேசு- சபை’ தேச விரோத செயல்களில் ஈடுபட்டதாகக் கூறி அதை இந்தியா உள்ளிட்ட போர்ச்சுகல்லின்

ஆட்சிப் பகுதிகளில் தடைசெய்தார். முடக்கப்பட்ட இயேசு சபையினர் பலர், 'பாரீஸ்-சபை'யில் உறுப்பினராகி தங்கள் தங்கள் இடங்களில் பணி செய்தனர். குருக்கள் பற்றாக்குறை மற்றும் திப்புசுல்தான் படையெடுப்பால் பலர் இந்து மற்றும் இஸ்லாம் சமயங்களுக்கு மாறினர். ஜேசுயிட்களின் உழைப்பின் பயனாக இன்றும் தமிழ்நாட்டின் தூத்துக்குடி, சிவகங்கை, கோட்டாறு மாவட்டங்களில் பல ஆயிரம் மீனவ மக்கள் கிறிஸ்தவர்களாக விளங்குகின்றார்கள்.

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு தொடரும்...

Author: Dr. Mrs. Salomi Manohar, Asst. Professor Rtd., (Pope's College, Sawyerpuram)
Thiruvanmiyur, Chennai. South India

## PRAYER-WINDOW PRAYER-WINDOW

## ஜெப-ஜன்னல் ஜெப-ஜன்னல்

### ஜெப-ஜன்னல் ஜெப நேரங்கள் ஜூலை - 2024

| | |
|---|---|
| **ஜெப-ஜன்னல்-1 காலை-ஜெபம்** | நாள்: 12-07-2024 இரண்டாம் வெள்ளி<br>நேரம்: காலை 5-முதல் 6-மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-2 மதிய-ஜெபம்** | நாள்: 19-07-2024 மூன்றாம் வெள்ளி<br>நேரம்: மதியம் 1-முயதல் 2-மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-3 இரவு-ஜெபம்** | நாள்: 26-07-2024 நான்காம் வெள்ளி<br>நேரம்: இரவு 8-முதல் 10-மணி வரை. |

பிரியமானவர்களே! இந்த ஜெப-ஜன்னல் ஜெப-நேரங்களில் தானி-6:10 வசனத்தின்படி **''தானியேல், மேலறையில் எருசலேம் தேவாலயத்திற்கு நேராய் பலகணிகள் திறந்திருக்க''** ஜெபித்ததைப்போல் நமது இயக்குநரும், ஜெப-ஜன்னல் ஜெப-வீரர்களும் ஆலயம் நோக்கி ஜெபிக்கவிருக்கிறார்கள். நீங்களும் இந்த நேரங்களில் உங்கள் ஆலயம் நோக்கி ஜெபிக்கும்படியாக அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

**CONTACT DETAILS:**
MOBILE:
9962924900/7871676100
WHATSAPP:
9789914463/7871676100
E-MAIL:
sjddharmaraja@gmail.com
POSTAL ADDRESS:
REV. S.J.D. DHARMARAJA,
MISSION DIRECTOR,
NO: 4/2-A, BARATHI ST.,
GANDHI NAGAR, SALIGRAMAM, CHENNAI - 93

**BANK DETAILS:**
NAME:
DHARMARAJA SJD.
S.B. ACCOUNT NO:
601071548.
BANK & BRANCH:
INDIAN BANK, NESAPAKKAM
IFSC CODE:
IDIB000N122.
BANK ADDRESS:
NESAPAKKAM, CHENNAI-78.

**UPI DETAILS:**
GOOGL-PAY (G-PAY) NAME:
REV. DHARMARAJA SJD
G-PAY NUMBER:
9789914463
QR CODE
FOR SCANNING
OUR WEBSITE:
www.ratchippu.com

Rev. Dharmaraja S.J.D
UPI ID: sjddharmaraja@okhdfcbank

**வேதாகம போட்டிக்கான பதில்களை அனுப்பவேண்டிய முகவரி**

திருமதி. ஜெயசீலி தர்மராஜா, எஃப்–1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A, பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை–93. வாட்ஸ்–அப்: 9789914463

Mrs. Jeyaseeli Dharmaraja, F-1, 1st floor, Bharathi flats, No: 4/2-A, Bharathi Street, Gandhinagar, Saligramam, Chennai-93. E-mail: sjddharmaraja@gmail.com. Whatsapp: 9789914463

ADDRESS FOR SENDING ANSWERS OF BIBLE CONTEST

# ஜெப-ஜன்னல் ஜெப-குறிப்புகள்

**கர்த்தரை நோக்கி மன்றாடுவோம் - Come! Let us all intercede to God**

1) அகில உலக சமாதானத்துக்காக... இஸ்ரேல்-ஹாமாஸ் போர் மற்றும் உக்ரைன்-ரஷ்யா போர் முடிவுக்கு வர... இலங்கை, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் வங்கதேச பொருளாதாரம் சீரடைய... பேரிடர்களின் சேதங்களிலிருந்து மக்கள் பாதுகாக்கப்பட...

2) இந்திய மக்களின் நல்வாழ்வுக்காக... இந்தியாவில் மதவாதம், பிரிவினைவாதத்தை ஊக்குவிப்பவர்களின் சூழ்ச்சிகள் முறியடிக்கப்பட... சிறுபான்மையினருக்கு எதிரான ஒடுக்குதல்கள் நிறுத்தப்பட... நீதிமன்றங்களில் நீதியரசர்கள் பாரபட்சமின்றி நீதி வழங்க... இந்தியாவில் பதவியேற்றுள்ள புதிய அரசு ஜனநாயக மரபுகளை மதித்து அனைத்து தரப்பு மக்கள் நலனுக்காகவும் பாரபட்சமின்றி செயல்பட...

3) தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக... மக்கள், இன - மத - மொழி வேறுபாடின்றி அமைதியாக வாழ... தமிழ்நாட்டில் விவசாயம், தொழில்கள், வியாபாரம் சிறக்க... அரசியல் குழப்பங்கள் முடிவுக்கு வர... தமிழ்நாட்டில் மத-வாத பிரிவினை-வாத அரசியல் சக்திகள் கட்டுப்படுத்தப்பட...

4) திருமதி. மெர்லின், திருமதி. பாக்கியா, திருமதி. திலகவதி மகேஷ், திருமதி. வைலட், திருமதி. சுதா, திருமதி. பிரியா சுதிர், திருமதி. புஷ்பாவதி, திருமதி. ஹனா விஜய் ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க...

5) இந்த கல்வியாண்டில் நுழைவுத்தேர்வுகள், கலந்தாய்வுகள், நேர்முகத் தேர்வுகளை சந்திக்கும் பிள்ளைகளுக்கு தேவையான ஞானம் வழங்கப்பட... பிரி-கே.ஜி முதல் பி.ஹெச்.டி வரையில் புதிய படிப்புகளுக்கு சென்றிருக்கிற நம் பிள்ளைகளுக்காக...

6) உயர்-கல்வி பயிலும் நம் பிள்ளைகள் எஸ்தர் பெரின், ஜேசன், சிப்ரா, ஜாஸ்மின், ஜாஷ்வா மேத்யூ, வில்சன், DR. கிறிஸ்டினா, கிப்ட்சன் தங்கராஜ், பிரின்ஸ் ஜேக்கப், ஜெனிபர், சிந்தியா பிரகாஷ், ஜோப்னா ஆகியோருக்கு சிறந்த ஞானம் வழங்கப்பட...

7) திருமதி. ஜேஸ்மின் ஞானதாஸ், REV. கருணாகரன், திரு. நெல்சன் (நகோமி), திரு. வெஸ்லி சாமுவேல், திரு. ஆபிரகாம் மனோகர், திரு. டெம்பிள் வில்லியம், திருமதி. அன்னாள் ஜெபக்கனி, திரு. அப்பன் டேவிட், திருமதி. ஃபிளாரன்ஸ் ராஜமணி, திருமதி. வி. மல்லிகா, திரு. ஜூலியன், திரு. அருள்சிங் ஆகியோரின் சரீர சுகத்திற்காக...

8) திரு. யாபேஸ் சாமுவேல், திருமதி. பால், திருமதி. ராஜேஷ்வரி, திரு. டேனியல், திருமதி. ஜரீன் வாக்கர், திருமதி. ஞானம் ஜெபராஜ், திருமதி. சுந்தரிபாய், திருமதி. ஞானம் ராஜசேகர், திருமதி. செல்வி பாண்டியன், DR. ஷீபா, திருமதி. ஜலீன் செல்லத்துரை, திருமதி. ரத்னாபாய் சாம், திருமதி. வசந்தா அன்பன், திருமதி. சுகிர்தா சின்னதுரை ஆகியோரின் குடும்ப ஆசீர்வாதங்களுக்காக...

9) நமது ஊழிய ஆதரவாளர்களான திருமதி. கிரேஸ் திவ்யா, திரு. ஜே.ஆர். டேவிட், செல்வி. ஷைனி, திருமதி. அரோமா சாத்ராக், திரு. சாம்சன் ஆபிரகாம், திரு. எஸ்.ஜே.பி. ராஜா, திரு. அசரியா ஞானதாஸ், திருமதி. நிறைமதி ஜாண்ஸன், திருமதி. வனஜா ஹெர்பர்ட் திரு. நிக்ஸன் எவர்பிரைட் ஆகியோருக்காக அவர்களின் குடும்பத்தாருக்காக..

Ratchippu Tamil Monthly. Registered News Paper.
Date of Publication: First week of every month
RNI Regn. No.: TNTAM/2012/48197. Postal Regn. (RNP) No.: TN/CC (S) DN/468/22-24.
Licensed to post without prepayment under WPP No.: TN/PMG(CCR)WPP-583/22-24.
Due date for Posting: 8th, 9th & 10th of every month. Posted on: 10th July 2024.
Posted at: RMS Patrika Channel Window, Egmore, Chennai-600 008.

# செய்தித்துளிகள்

1. அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலம் லாஸ் ஏஞ்சல்ஸ் கவுன்டி பகுதியில் 3600ஏக்கர் நிலத்தில் காட்டுத்தீ பற்றி, பிரமிட்லேக் பகுதியை நோக்கி நகர்ந்து வருகிறது. இதில் பாதிக்கப்பட்ட 1200பேர் பாதுகாப்பாக வெளியேற்றம்.

2. கேரளாவின் பெயரை, அம்மாநிலத்தில் பொது வழக்கில் உள்ள பெயரான 'கேரளம்' என மாற்றுவதற்கான தீர்மானம் 2ம் முறையாக கேரள சட்டசபையில் அனைத்து கட்சிகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

3. தமிழ்நாடு முதல்வரின் உத்தரவின்படி கோவையில் அமைக்கப்படும் பன்னாட்டு கிரிக்கெட் ஸ்டேடியத்துக்கான இடம் தேர்வு செய்யப்பட்ட நிலையில் அதற்கான அமைப்புப் பணிகள் விரைவில் தொடங்கப்படும் என அறிவிப்பு.

4. சென்னைப் பெருநகர சரக்கு போக்குவரத்து திட்டத்தை உருவாக்குவதற்காக அமைக்கப்பட்ட பெருநகர போக்கு வரத்து குழுமத்தின் 22அதிகாரிகள் கொண்ட குழு 6மாதங் களில் பணியை முடிக்க தமிழ்நாடு அரசு உத்தரவு.

5. பிரான்ஸ் தலைநகர் பாரீசில் இம்மாதம் 26ம் தேதி முதல் ஆக-11-ம் தேதி வரை நடைபெறும் பாரீஸ் ஒலிம்பிக் போட்டித் தொடருக்கான ஹர்மன்பிரீத் தலைமையிலான 16பேர் கொண்ட இந்திய ஆண்கள் ஆக்கி அணி அறிவிக்கப்பட்டது.

Posted on: 10th July 2024

To

## இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தம்
## THE PRECIOUS BLOOD OF JESUS

**The month of July**

ஜூலை மாதம் முழுதும் '**இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தம்**' எனும் தியானத் திற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. கத்தோலிக்க மற்றும் சீர் திருத்த திருச்சபைகளில் '**இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தம்**' திருநாள் ரோம-5:9, எபி-10:19 மற்றும் 1யோவா-1:7 போன்ற வேதப்பூர்வ ஆதாரங்களுடன் ஆசரிக்கப்படுகிறது. கிறிஸ்துவின் துளைக்கப்பட்ட விலாவிலிருந்து திருச்சபையும் அவருடைய இரத்தத்திலிருந்து சாக்கிரமெந்துகளும் பிறந்ததாக திருச்சபைப் பற்றுறுதி கூறுகிறது. இயேசுவின் விலையேறப் பெற்ற இரத்தத்தின் திருநாள் 1849ம் ஆண்டு போப் பயஸ் அவர்களால் கத்தோலிக்க திருச்சபையில் நிறுவப்பட்டது.

If undelivered Please return to:
**REV.S.J.D. DHARMARAJA**
MISSION DIRECTOR
RATCHIPPU TAMIL MONTHLY,
NO: 4/2-A, BHARATHI STREET,
GANDHI NAGAR, SALIGRAMAM,
CHENNAI -93, TAMILNADU, SOUTH INDIA.

Owned & Published by: S.J.D.Dharmaraja. Published from No:6-A, Ambedkar St., Gandhinagar, Saligramam, Chennai-93. Printed by: S.Isaac Prince at Sams Graphics, No: 1, 12th Avenue, Ashok Nagar, Chennai - 600 083. Editor: M. Azariah Gnanadoss.